# தனித்துவம் மிக்க ‘தாயிரங்கு பாடல்கள்’

த.ஜெயசீலன்

கடந்த சுமார் இருபது வருடங்களாக கவிதைத் துறையில் ஈடுபட்டு வரும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் சிரேஸ்ர விரிவுரையாளரான கலாநிதி செ.சுதர்சன் அவர்களுடைய சுமார் 47 கவிதைகள் ‘தாயிரங்கு பாடல்கள்’ என்ற தொகுதியாக மணற்கேணி பதிப்பக வெளியீடாக அண்மையில் வெளி வந்திருக்கின்றது. தமிழ் துறையில் சிறப்புக் கலைமாணி, முதுதத்துவமாணி மற்றும் முனைவர் (கலாநிதி) பட்டங்களைப் பெற்ற தமிழ் புலமையாளரான செ.சுதர்சன் ஒரு கவிஞராகவும் ஒரு ஆராய்ச்சியாளராகவும் ஒரு விமர்சகராகவும் தன்னை அடையாளப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது.

இவரது முதல் கவிதைத் தொகுதி ‘மற்றுமொரு மாலை’ 2004 ஆம் ஆண்டில் வெளி வந்தது. சுமார் பதினெட்டு வருட இடைவெளியின் பின் இக்கவிதைத் தொகுதி வெளி வந்திருக்கிறது. இவ் இடைப்பட்ட காலத்தில் இவர் சுமார் இருபது நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளமை இவரது தமிழ்ப் புலமைக்கு சான்றாகும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செ.சுதர்சன் அவர்கள் யுத்தத்தின் புத்திரர்களில் ஒருவர். தனது பல்கலைக்கழக வாழ்வு வரை யுத்த அவலங்களை நேரடியாக சந்தித்து வந்தவர். அக்கால கட்டங்களில் முகிழ்ந்த பல கவிஞர்களின் வரிசையில் தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டவர். கல்வித் துறையில் அதிக நாட்டம் செலுத்தி வந்த அதே நேரம் கலைத் துறையிலும் தொடர்ந்து ஈடுபட்டவர். எனது சம காலத்தவரான செ.சுதர்சன் அவர்கள் நான் உட்பட என் சம காலத்தில் தோன்றிய இளம் கவிஞர்கள் போல கவிதைத் துறையில் ஆர்வத்தோடு செயற்பட முயன்றதுடன் யுத்தத்தின் கோரங்களையும் சமூக சீர்கேடுகளையும் தமிழ் மக்கள் சந்தித்த இடப்பெயர்வுகள், இழப்புக்கள், வலிகளையும் சமூக அரசியல் சாபக்கேடுகளையும் பிரதான பாடு பொருளாகக் பாடியிருக்கிறார்.

இவரது ‘தாயிரங்கு பாடல்கள்’ என்ற தொகுதி ‘சிங்கம் தின்ற நிலம்’ , தோலகட்டி, காலிமுகம் 22, பேதுறுவுக்கு எழுதிய திருமுகம், வேள்வி மறுக்கப்பட்டவர்களின் பாடல், உதிரிகள், மீசை பிடுங்கிகள், தாயிரங்கு பாடல்கள் ஆகிய தலைப்புக்களிக் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

‘சிங்கம் தின்ற நிலம்’ என்ற தலைப்பில் நான்கு கவிதைகள் உள்ளன. இத்தலைப்பு கூறிச் செல்லும் விடயம், இதன் பரிமாணம், அதன் உள்ளார்ந்த அரசியல் என்பன மிகப் பெரிய விடயங்களைச் சுட்டிச் செல்கின்றன. எவ்வாறு கவிஞர் வாசுதேவனின் ‘கூடைக்குள் தேசம்’ என்ற கவிக்கூற்றின் மூலம் இலங்கை பொருளாதார அவலம் குறியீடாக காட்டப்பட்டதோ அது போல ‘சிங்கம் தின்ற நிலம்’ என்ற கூற்றுக்குள் இலங்கையின் சுமார் எழுபது வருட கால வரலாற்று அவலம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இனக் குழுமங்களுக்கிடையில் ஏற்பட்ட பிளவுகளைப் பயன்படுத்தி இந்த நாட்டை யார் கபளீகரம் செய்தார்கள் என்ற வரலாற்றுச் செய்தி குறியீடாக ‘சிங்கம் தின்ற நிலம்’ என்ற கவிதைகள் ஊடாகச் சொல்லிச் செல்லப்படுகிறது. இவ்வாறு காலக் கண்ணாடியாக விளங்கும் கவிதைகளில் ‘உன் காணி நிலம் வேண்டும்’, ‘அநாதை நிலம்’, ‘உம் செம்பாட்டுத் தமிழ் தரையினை தா’ ஆகிய கவிதைச் சுலோகங்கள் பேசிச் செல்லும் விடயங்கள் ஆழம் அகலம் மிக்கவை.

அடுத்து, ‘தோலகட்டி’ என்ற மகுடத்தின் கீழ் வரும் ஐந்து கவிதைகளில் வலி வடக்கைச் சேர்ந்த தோலகட்டி என்ற கிராமத்தில் ஒரு காலத்தில் யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அரங்கேறிய துன்பியல் சம்பவங்கள் விபரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கவிதைகளும் அங்கு நடந்த கொடுமைகளை ஒவ்வொரு விதமாக எடுத்துரைத்து இரத்தக்கண்ணீர் வடியச் செய்கின்றன. ஓவ்வொரு கவிதைகளும் இறுதியிலும் “என்ன எக்காளமோ” என்று முடிவடைகையில் அதனூடாக அவ் அவலங்களை அரங்கேற்றியவர்களின் ஆணவம், அகம்பாவம், மேலாண்மை மனம், ஈவிரக்கமற்ற தன்மை, சகிப்புத் தன்மையற்ற மத மேலாண்மை என்பவற்றை எடுத்துரைக்கின்றது.

**“மனசும் காவியிட,**
**வேண்டாமெனத் துறந்துயரும்**
**தபசுக் கரத்துடையும்,**
**வேண்டினர் குருதி”**

**“குதியுறைந்த ஆத்மா இளைப்பாற**
**தேவஸ்தான மடங்கள் சிவந்தன”**

**“வெளியேற கால்களற்ற பொழுதில்**
**தூதுரைத்த சம்மனசு வரவில்லை”**

**“நெல்லிக் குடுவைகள் குருதியைப் பீறின”**

**“எப்போதுவெளிவரும் என் ஊரின்**
**ஆழ் கிணற்றுப் பூதம்”**

என்ற வெவ்வேறு கவிதைகளின் வரிகள் என்றோ பட்ட காயங்ஙளுக்கும் அனுபவித்த வலிகளுக்கும் சாட்சிகளாக அமைகின்றன.

**‘வெள்ளிகள் நள்ளிரவில் ஒளி தும்மும்’** என்ற வரியில் தனது கவித்துவத்தை கவிஞர் காட்டிச் செல்கின்றார். எம் வடகிழக்கு மாகாணங்களில் தோலகட்டி போல துயரக் கதைகளைச் சுமந்த ஆயிரம் ஆயிரம் கிராமங்கள் இடங்களைப் பற்றிய நினைவுகள் இக் கவிதைகளை வாசிக்கும் போது பீறிட்டு எழுகின்றன.

தொடர்ந்து, ‘காலி முகம் 22’ என்ற வகுதியின் கீழ் பதின்மூன்று கவிதைகள் இலங்கையின் ஜனநாயக போராட்ட வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத, எண்ணிப் பார்க்க முடியாத சாத்தியங்களினை ஏற்படுத்தி அரசு இயந்திரத்தையே ஆட்டம் காண வைத்த காலி முகத்திடல் போராட்டமான ‘அறகலய’ பற்றிபேசிச் செல்கின்றன். இக் கவிதைகள் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்த காலப் பகுதியிலேயே சூடாறாமல் வெளிவந்து பலரையும் சூடேற்றியவை. ஆனால் இன்று அப்போராட்டத்தின் இறுதி விளைவு, தூர நோக்கான அப் போராட்டம் பெற்றுத்தந்த தீர்வு, ஏற்பட்ட உண்மையான மாற்றம் என்ன என்பன எல்லோர் முன்பும் மிகப் பெரும் கேள்விகளாக எழுந்து நிற்கின்றன.

இக் காலிமுகப் போராட்டம் தொடர்பாக தமிழர் தரப்பில் பல்வேறு விமர்சனங்கள் உள்ள போதும் ஒரு தமிழ் பிரதிநிதியாக தன்னுடைய பங்களிப்பையும் தான் பெற்ற அனுபவங்களையும் கவிஞர் இக்கவிதைகளில் பதிவு செய்திருக்கிறார். இச்சந்தர்ப்பத்தில் வடகிழக்கு வாழ் ஏனைய தமிழ் படைப்பாளிகள் இப் போராட்டம் பற்றி ஏன் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. சுமார் முப்பது வருடமாக எம்மண்ணில் மிகப் பார தூரமான அவலங்கள் நேர்ந்த போது அவற்றை கண்டும் காணாமல் மௌனம் காத்து அவற்றை வழிமொழிந்து இனம் சார்ந்து சிந்தித்த ஆள்வோருக்கு ஆதரவு தந்து ஈற்றல் யுத்த முடிவில் பால் சோறு பரிமாறி மகிழ்வை பகிர்ந்த தரப்பினர் பால் இல்லை, பால்மா இல்லை, எரிபொருள் இல்லை என்ற ஒப்பீட்டளவில் மிகச் சாதாரணமாக இலகுவில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் கிளர்ந்தது தமிழ் தரப்பை சிந்திக்க விசனப்பட, வைத்திருக்கலாம் அல்லது ஏளனமாக பார்க்க ஒதுங்கிப் போக வைத்திருக்கலாம், என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் செ.சுதர்சன் அவர்கள் இப்போராட்டத்தில் தன்னையும் ஒரு பங்காளியாக்கி அதன் பரிமாணங்களை பதிவு செய்த அதே நேரம் தன் இனம் சார்ந்தும் தன் விமர்சனங்களையும் முன்வைத்து நகர்வது முக்கியமானது.

**“ஒரு துண்டு பாணும்**
**ஒரு பால்மா பையும்**
**ஒரு கலன் எரிபொருளும்**
**மின்வெட்டும் போராட...............”** என்றும்

**“மாளிகையின் சுவர்களில் பீதிபொங்கி**
**வழிகிறது பசியின் கரங்கள் பறித்துப்**
**போகும் என்னும் அச்சத்தில்”** என்றும்

**“சூரியன் நிலத்துக்கு”** என்றும்

**“உன்னவர்**
**எனது உறவுகளை எரித்த போது,**
**காணாமலாக்கிய போது,**
**கை, கால் வெட்டிய போது**
**“புத்த சரணம்” ஓதினாய்!”** என்றும்

**“ஒரு நாளில் அவர்கள் பாடிய பாடல்**
**ஒரு ஊரை,**
**ஒரு வயல் நிலத்தை**
**ஒரு தெருவை,**
**ஒரு பாடசாலையை,**
**ஒரு மீன் பிடிக் கடலை,**
**இன்னும் .....**
**ஒரு கிராமத்தையே**
**அவர்களது மக்களுக்குப்**
**பரிசளித்திருக்கிறது.”** எனவும்

**“அப்பா … !**
**அதிகாரத்தின் கோவணம்**
**எப்படி இவ்வளவு உயரத்தில் பறக்கிறது!**
**இது பழைய இராச்சியமா?**
**புதிய இராச்சியமா?”** எனவும்

**“அப்பா … !**
**ஒலு பாலின் தவிப்பில்**
**ஒரு இராச்சியமும்,**
**ஒரு மருந்தின் தவிப்பில்**
**ஒரு அரியணையும்**
**எவ்வாறு எரிகின்றன?”** எனவும்

**நீங்கள் முட்டாள்களா?**
**அடி முட்டாள்களா?”** எனவும் பல்வேறு விடயங்களை பேசி வாசர்களை சிந்திக்க வைக்கிறது இப்பிரிவிலுள்ள கவிதைகள்.

அடுத்து **“பேதுருவுக்கு எழுதிய புதிய திருமுகம்”** என்னும் பிரிவின் கீழ்வரும் நீண்ட தனிக் கவிதை உலக அரசியலில் குறிப்பாக கியூபா அரசியல் பின்னணியை சொல்கிறது.

**“மத அதிகாரம் நிரம்பிய**
**வைன் கிண்ணத்தை**
**ஏந்திய உன் பிள்ளைகள்,**
**சிவப்பு மலர்களால் பூக்கும் தேசங்களில் …**
**குருதியைப் பரிமாறியது**
**எவரின் நினைவாக?**
**கழுகுகளுக்காக எனின் “ஆமென்” உரைப்பாயாக?”** என்பது ஒருபதச்சோறு.

ஆட்டாகுதி (ஆட்டு + ஆகுதி) வேள்வி மறுக்கப்பட்ட பாடல்கள் என்ற பகுதியில் ஐந்து கவிதைகள் உள்ளன. யாழின் வலி வடக்கில் இன்றும் பிரபலமான வேள்வி பற்றிய கவிதைகளாக அவை அமைகின்றன. கிராம வாழ்வியலில் ஒரு அங்கமாக திகழும் வேள்வி பற்றி நேரடியாக சென்று ஆய்வு செய்து பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் இக்கவிதைகளில் பல கேள்விகளை கவிஞர் எழுப்புகின்றார். இக்கவிதைகள் வேள்வியின் விளைவுகள் இரத்தமும் சதையுமாக பதிவு செய்யும் அதே நேரம் நீண்ட காலமாக தொடர்ந்த சிறு தெய்வ வழிபாட்டின் தனித்துவத்தை இன்றைய காலம் கேள்விக்குட்படுத்தப்படுவதையும் பேசுகிறது.

**“கிடாய்கள் சூழப் பொலிய வரும்**
**குருதியாடிய பாதம்,**
**பதமருளுமெனில்….**
**ஐயனுக்கு நாமிடுவது**
**ஆட்டாகுதியன்றோ!”**

**“இரத்தம் தோய,**
**மாமிசச் சமித்தை**
**இடுமொரு வெட்டில்,**
**தலை தாழ் படும்”**

**“தன் முற்றத்தில் பரவிய**
**கிடாயின் குருதியை,**
**மாமிசச் சமித்தை,**
**கோழியின் சூட்டுத் தசையை,**
**கொத்தியும் காளியும்**
**ருசித்த கதையை,**
**சிவந்த விழிகளில்**

**வரைந்து போவார்.''**

**''தீவட்டி ஒளியில்,**
**பறையொலி மினுங்க,**
**ஆச்சியின் மேனியில் கொத்தி ஏறுவாள்!**
**அப்புவின் மேனியில் காளி ஏறுவாள்!**
**நூறு தலைமுறை ஆட்டை வெட்டிய,**
**அவனில் வைரவர் நின்று ஆடுவார்!''** என்பன பலிகள் பற்றிய இரத்தப் பிசுபிசுப்புக் காயாத பாடல் வரிகள் எனலாம்.

**'உதிரிகள்'** என்ற பகுதியின் கீழ் ஈழத்து கடந்த கால, சம கால அரசியல் பேசும் எட்டுதற்கு உள்ளன.

**''கீதங்களால் அசையும் கொடிகளை**
**ஓர் ஏழைக் குழந்தையின்**
**கரத்தில் எழுந்த**
**பிச்சைப் பாத்திரம்**
**விழுங்கிச் சென்றது!''** என்றும்

**"ஒரு ஊழி வரையுமான முழுக்கணக்கு**
**இல்லையெனிலும் பரவாயில்லை,**
**அது முடிந்த**
**வாய்க்கால் வரையுமான கணக்கு**
**சுமாரான எவ்வளவு இருக்கும்?''** என்றும் வரிகளுள் "பொடிவைத்து " அரசியல் பேசுகிறார்.

"**மீசை பிடுங்கிகள்**" என்ற பிரிவின் கீழ் வரும் கவிதைகள் சாதிய மேலாண்மை சார்ந்தவர்களுக்கு எதிராக ஒலிக்கும் ஒடுக்கப்பட்ட ஒரு தரப்பின் நெஞ்சக் குமுறல்களையும் நாமும் இழைத்தவர்கள், சளைத்தவர்கள், குறைந்தவர்கள் அல்ல என்ற மனப்பாங்கையும் காட்டுகின்றன.

**''உன் மீசையை விடவும்**
**அழகானது**
**என் பாட்டனின்**
**சவரக்கத்தியின் பளபளப்பு''**

**''தடித்தவுன் தோலை விடவும் …**
**என் பாட்டனின் சவரக்கத்தி**
**நூறாயிரம் ஆண்டுகளாய்**
**திமிர் பிடித்தது''** என்பவை பொது நீதியாக அன்றி நசுக்கப்பட்டவர்களின் பக்கத்துக் குரலாக பதிவாகிறது.

'தாயிரங்கு பாடல்கள்' ஐங்குறு நூறு, நற்றிணை, புறப்பாடல் போன்றவற்றில் கையாளப்பட்ட அடிகளை அல்லது வரிகளை எமது இக்கால பிரச்சினைகள் , இன்றைய ஈழ அரசியல் என்பவற்றுடன் பொருத்தி பார்க்க வைத்து புது அனுபவத்தை வாசகர்களுக்கு தருகிறது.

ஆக செ.சுதர்சனின் 'தாயிரங்கு பாடல்கள்' தொகுதியிலுள்ள கவிதைகள் தற்காலத்தில் வெளிவரும் ஈழ கவிதைகள் வரிசையில் தனித்துவமாவை என்பதுடன் சமூக அரசியல் சார்ந்த சர்ச்சைகளுக்கும் பிள்ளையார் சுழி போட வல்லன என்றால் மிகையில்லை.

2023.04.25